RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s836

OPEN ACCESS

# இனக்குழு வாழ்வியலை முன்வைத்து தொன்மக்கதைகள் வழி - தாய்த்தெய்வ வழிபாட்டு மரபும் தந்தை வழி சமூக உருவாக்கமும்

செ. வீரலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை-626101, தமிழ்நாடு, இந்தியா

# Mythology Presupposes Ethnic Group Life-The Tradition of Mother Goddess Worship and Paternal Social Formation

**S. Veeralakshmi** [a, *]

[a] Department of Tamil, Devanga Arts College, Aruppukottai-626101, Tamil Nadu, India

* Corresponding Author: ssjaikumar74@gmail.com

Received: 29-04-2021
Revised: 07-05-2022
Accepted: 21-05-2022
Published: 21-07-2022

Check for updates

## ABSTRACT

Myths, which are man-made fictions, are denoted by the term "mythology" by anthropologists. These myths, created by the imagination of the people, are the ones that convey the history and values of life to society. In this, religious myths are the lifeblood of a society and a language that expresses thought. Religious myths serve to strengthen the religious beliefs of a race and the social structure of that race. Civilization in social life. Although the culture has developed in many steps, information technology has reached its peak, and the objective changes, the majority of these stories about God, in the subjective sense, stop them at the point of origin of the stories. In Indian social culture, where myths are culturally valuable, each caste uses mythological stories to distinguish themselves from other castes. Based on this, the Devangar people also have their own myths. They live by considering the worship of the Mother Goddess as their cultural discipline. This article examines their social life from a sociological point of view, presenting their mythology and following the worship of the mother goddess and the paternal way of life in their social life.

**Keywords:** Mother Goddess, Worship, Social Structure, Ethnic Group Life

## முன்னுரை

நாடோடிகளாக வரையறையில்லமால் மனம் போன போக்கில் சமுதாய ஒழுங்கமைதியின்றி தம் வாழ்வியலை தொடங்கியவர்கள் இனக்குழுமக்கள். நாகரிக வளர்ச்சியில் பண்பாட்டு படிநிலைகளில் இனகுழுச் சமூகங்கள் அரசு, பண்பாடு, தொழில் முறை முதலியவற்றால் இடப்பெயர்வுக்கு உள்ளாயின. இவ்வாறு இடப்பெயர்வுக்கு உள்ளான இனக்குழுச் சமூகங்கள், அரசியல், சமூக, சமயச் சூழல்களின் தாக்கத்திலும், நவீன உலகை நோக்கிய மனித அறிவின் விரிவாக்கத்திலும், தனது தொன்ம அடையாளங்களைக் கைவிடாது இனக்குழு வாழ்வின் தனித்துவப் பண்பை உலகிற்கு விளக்குகின்றன, இனக்குழு சமூகங்களின் கலாச்சார பண்பாடுகளை அறிந்து கொள்ள தொன்மங்கள் பயன்படுகின்றன. இக்கதைகளில் இந்திய சமூக மரபில் படைப்புத் தொன்மத்தை விட, மனித குலத்தோற்றம் குறித்த “தோற்றத் தொன்ம “கதைகளே பெரும்பான்மையும் பேசப்படுகிறது. தோற்றத் தொன்மத்தில் சைவ சித்தாந்த மரபில் ஆதிசக்தி, சிவன் இவர்களனால் உலகமும், மனித இனமும் தோற்றம் பெற்றன என்ற கதையாடல்களே பேசப்படுகின்றன. பிற்காலத்திய ஆரிய, திராவிட பண்பாட்டு மோதல், ஆணாதிக்கச் சிந்தனை கோட்பாடுகள் தோற்றத் தொன்மத்துடன் பொருத்திப் பல்வேறு

விவாதங்களுக்கும், கருத்துக்களுக்கும் உட்பட்டு பேசப்படுகின்றன. இத்தகைய சமூகப் பண்பாட்டுத் தளத்தில் சைவசித்தாந்த “தோற்றத் தொன்ம “கதையைத் தங்களின் இனவரலாறாகக் கொண்டவர்கள் தேவாங்கர் குல மக்கள். சிவனின் அங்கத்திலிருந்து தோன்றிய தேவல முனிவின் வம்ச வழியினராக தங்களை அடையாளப்படுத்தும் மரபில், வழிபாடு, தொழில் நிலையில் பெண் தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளும் பண்பு தற்கால ஆய்வியல் சிந்தனை மரபின் படி சில கருத்தாடல்களுக்கு வழிவகை செய்கின்றன. அக்கருத்தாடல்களுக்கு விடைத்தேடும் கள ஆய்வாக சமூகவியல் ஆய்வின் அடிப்படையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## தொன்மம் - வரையறை

மனிதனால் புனையப்பட்ட மீவுயர்க் கற்பனைகளும், மரபு வழிப்பட்ட கதையாடல்களும் தொன்மங்களாக வழங்கப்படுகின்றன. இத்தொன்மங்களின் தோற்றம் குறித்து அறியமுடியவில்லையெனினும், அவை மக்களின் எண்ணங்களில் கதைகளாக வளர்ந்து, விதைகளாக வாழ்வு பெற்று கலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளன. தொன்மம் குறித்து அறிஞர்கள் பல்வேறு வரையறைகளை முன்மொழிகின்றனர். அதனில் சில வரையறைகள்.

மித் (Myth) என்ற ஆங்கிலச் சொல் 'Mythes' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து உருவானது. கிரேக்கத்திலுள்ள மிதாஸ் என்பது சமயம் சார்ந்த அடிப்படையான விளக்கங்களையும், கடல், இயற்கை பல்வேறு ஆற்றல் பற்றிய செய்திகளையும் தருகின்ற மரபுக் கதைகளாகும். மித் என்பது இரண்டு முதன்மையான கருத்துக்களைக் கொண்டுள்ளது. ஒன்று வரலாற்றுத் தொடர்பான முக்கியத்துவம் மற்றொன்று உளவியல் சார்ந்த தன்மைகளைப் பெற்றிருப்பது என்று உலகப் பல்கலைக்கழகக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது”.

“கடவுள்கள் மற்றும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகள் பற்றியும் கற்பனையே என்று எண்ணும் அளவுக்கு நம்பமுடியாத நிகழ்ச்சிகளைப் பற்றியும் வருவன தொன்மங்கள்” என்று பிரிட்டானிக்கா ஆங்கிலக்கலைக்களஞ்சியம் கூறுகின்றது

“தொன்மம் என்பது கூட்டுக்கற்பனையின் விளைவு ஆகும். அதில் அறிவியல் ஆய்விற்கோ பகுத்தறிவின் பகுப்பிற்கோ இடமில்லை” என்கிறார் (Kathir Mahadevan, 1989).

மேலும், இத்தொன்மம் என்னும் புனைக்கதைகள் “காட்டுமிராண்டி சமுதாயத்தில் வழங்கிய புனைகதை, அதாவது மூலநிலைப் புனைகதை சொல்லப்படுகின்ற ஒரு கதையன்று. அது வாழ்க்கையின் உண்மையாகும். இன்று நாம் படிக்கும் ஒரு நாவலின் தன்மையைப் பெற்றதன்று நாகரிக முற்கால புனைகதை அக்கதையின் நிகழ்ச்சிகள் உண்மையில் புராதன காலத்தில் நடைபெற்றதாக அக்கதையைச் சொல்லுபவர்கள் நம்புகிறார்கள். அதுமட்டுமல்லாமல் அக்கதையின் சம்பவங்கள் நிகழ்ந்த காலத்திலிருந்து தம் காலம் வரை உலகையும், மனித விதியையும் இயக்கிவருவதாகவும் அவர்கள் நம்புகிறார்கள்.” என்று தொன்மம் கருத்துக்களை அறிஞர்கள் மொழிகின்றனர் (Vaanamaamalai, 1980).

## தேவாங்கர் இனமக்கள் வாழும் பகுதிகள்

சௌடேஸ்வரிஅம்மனைத் தெய்வமாக வழிபடும் இவ்வின மக்கள் இந்தியாவில் கர்நாடகா (அனைத்து மாவட்டங்களிலும்), தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு (அனைத்து மாவட்டங்களிலும், குறிப்பாக சேலம், மதுரை, திண்டுக்கல், தேனி,அருப்புக்கோட்டை) கேரளா, ஒடிசா, மத்தியப் பிரதேசம், டெல்லி, மஹாராஷ்டிரா, பகுதிகளில் வாழ்கின்றனர்.

## தேவாங்கர் குல தொன்மக்கதை

தொன்மங்கள் பெரும்பான்மையும் சமயம் சார்ந்த சடங்குமுறைகளுடன் தொடர்புப்படுத்தப்பட்டுள்ளன. கடவுளர் சார்ந்த கதைகள், குறியீடுகள், கதையாடல்கள் எனத்

தொன்மங்கள் சமயம் சார்ந்து இயங்கிவருகின்றன. "தெய்வங்கள், வழிபடுவோரின் வாழ்க்கை முறையில் இருந்து எழுகின்றன. ஒரு சமுதாயம் அதன் உணவு, உடை, உறையுள் ஆகிய புறவாழ்க்கைத் தேவைகளை எந்த முறையில் பெறுகிறதோ, அதற்காக எத்தகைய சமுதாய அமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ளதோ, அந்த அமைப்பின் அடிப்படையின் மீது தெய்வநம்பிக்கை என்ற மேற்கோப்பு எழும்" என்ற எங்கல்ஸின் கருத்திற்கேற்ப இக்குலமக்களின் தொன்மக்கதை அமைகின்றது (Vaanamaamalai, 1980).

இக்கூறுகளை உள்ளடக்கிய தேவாங்கர் குலத்தொன்மக்கதையை, "தேவலப் பிரம்மம் சிவபிரான் நெற்றிக் கண்ணில் இருந்து வெளிவந்து ஆடையும், பூணூலும் மற்றவர்க்குத் தருவது வழக்கம். ஒரு கல்பகாலத்தின் துவக்கத்தில் தேவர்களும், முனிவர்களும் சூத்திர வஸ்திரங்களுக்காக சிவபிரானைப் பிரார்த்தித்துக் கொண்டு நின்றனர். சிவபிரான் சுயம்புவான தேவாங்க பிரம்மத்தை வழக்கம் போல் தியானித்தார். பரம்பொருளும் தேவல முனிவர் வடிவம் தாங்கி சிவ சகஸ்ரார கமலத்தில் இருந்து வெளிப்பட்டார். அங்கிருந்த அனைவருக்கும் ஆடையையும், பூணூலும் வழங்கினார். ஆனால் அங்கிருந்த காண்டரிஷிக்கு மட்டும் ஒன்றும் கொடுக்கவில்லை. காண்டரிஷி தேவலரே எனக்கும் ஆடையும் பூணூலும் வேண்டும் எனக் கேட்டார். ஆனால் தேவலரோ "உமக்கு நாளைக்குத் தருகின்றேன், இன்று இல்லை எனக் கூறினார். காண்டரிஷி கடுங்கோபம் கொண்டு "எனக்கு இல்லை என்றதால் நீர் மானுடயோனியில் பிறப்பீர்" எனச் சாபம் இட்டார். "காண்டரிஷியே! நீர் இட்ட சாபம் லோக உபகாரமாயிற்று. எல்லா உலகங்களும் என்னுடைய சொரூபமே! எனக்கும் மனிதருக்கும் எந்த பேதமும் இல்லை. ஏன் எனில், எல்லா உயிர்களும் நானே" என்று தேவலர் கூறி அருளினார். உலகத்து உயிர்களுக்கு ஆடை நெய்வதற்கு நூல் பெறுவதற்கு ஸ்ரீமன் நாராயணனிடம் செல்லும் முன் தேவாங்க மாமுனிவர் உமாதேவியை வணங்கினார். "தாயே! நான் சுகமாய் பாற்கடல் சென்று திரும்பி வரவேண்டும். நான் எடுத்த காரியங்களில் ஜெயம் பெற வேண்டும். அருள்வாயாக" என்று வேண்டினார். மகனே வழியில் விரோதிகள் தோன்றினால் என்னை நினைத்துக்கொள். அந்த கணமே நான் தோன்றி விரோதிகளை சம்ஹரிப்பேன் என்று வரம் தந்தாள். தேவலர், நாராயணனிடம் சென்று, ஜகத்ரட்சகனே! பரமசிவன் விருப்பத்தின்படி உங்கள் நாபிக் கமலநூலைப் பெற்றுப் போக வந்துள்ளேன். அந்த நூலால் ஆடைகள் நெய்ய வேண்டும். ஆடைகளைச் சகல தேவர், மகரிஷிகள், மானிடர், நாகர் அனைவருக்கும் வழங்க வேண்டும். அனைவரின் மானத்தையும் காக்கவேண்டும். தாங்கள் அருள் கூர்ந்து நூலைத் தந்து அருளல் வேண்டும்" எனத் தேவலர் வணங்கினார்.

தேவாங்கனே உலகம் தொடங்கிய காலம் முதலாக இந்நூலைக் காப்பாற்றி வந்துள்ளேன். உன்னிடம் வழங்க வேண்டிய காலம் வந்துவிட்டது. நீ நூலை வாங்கிச் சென்று ஆடைகள் நெய்து மூவுலகோர் மானத்தையும் சம்ரட்சணம் செய்வாயாக. செல்லும் வழியில் நற்காரியங்களுக்குத் தீங்கு பல செய்யும் அரக்கர்கள் மாயாவிகளாய் இருக்கின்றனர். நூலைக் கவர முனிவர் வேடம் அணிந்து வருவார்கள். அவர்களின் மோசத்தில் சிக்கி விடாதே. உன் வன்மையால் அவர்களை வென்று செல்லுவாயாக என்று ஆசி வழங்கி தன் சக்கரங்களில் ஒன்றையும் நூலையும் தேவலருக்குக் கொடுத்து மறைந்தார். கள்ளத் தவவேடம் கொண்ட முனிவன் ஒருவன் அனேக சீடர்கள் புடை சூழ தேவலரைத் தாக்கத் தொடங்கினர். தேவலர் உடனே மகாவிஷ்ணுவால் தமக்குக் கொடுக்கப்பட்ட சக்கரத்தை மந்திர உச்சாடனத்துடன் விடலாயினர். சக்கரம் அரக்கர் கூட்டத்தைத் தாக்கியது. கை வேறு தலை வேறு என முண்டங்களாக்கி கபந்தங்களாக ஆடலாயினர் அரக்கர். வஞ்ஜிரமுஷ்டி, தூம்ரவக்கிரன், தூம்ராட்சன், சித்திரசேனன், பஞ்சசயனன் என்னும் தலைமை அரக்கர் ஐவரும் தேவலரை ஒருமுகமாக எதிர்த்தனர். பாண மழை பொழிந்தனர். சக்கரம் அவர்களை அறுக்கப் பெருகிய அவர்கள் இரத்தத் துளிகளில் இருந்து கணக்கற்ற அரக்கர் தோன்றலாயினர். அரக்கர் கூட்டம் பல்கிப் பெருகலாயிற்று. மகா சக்தியே சண்டிகா! சாமுண்டி! எனத் தேவலர் தம் தாயைத் திரு உள்ளத்தில் சிந்தித்தார். அப்பொழுது ஒரு கையில் சூலம் ,இரண்டாம் கரத்தில் வாள், கதையை ஒரு கரம் தாங்கியது. சக்கரத்தை ஒரு கரம் தாங்கியது. ஆயுதங்கள் நான்கும் அரக்கரைச் சம்ஹரிக்க ஆரம்பித்தன. ரக்த பீஜர்களான அவர்களின் ரத்தம் பூமியில் விழாதவாறு தேவியின் சிங்க வாகனம் நாவால் பருகிற்று. தலைமை அரக்கர் ஐவரும் திரி சூலத்தால் மாய்ந்தனர் அவர்கள் இரத்தம் வெண்மை, கருமை, செம்மை, மஞ்சள், பசுமை கொண்ட ஐந்து நிறங்களாய் ஓடியது. தம்மிடம் இருந்த

நூலை ஐந்தாகப் பாகம் செய்த தேவலர் அதில் தோய்த்து பஞ்சவர்ண நூலாக மாற்றிக் கொண்டார். அப்பொழுது, மகனே! நீ எப்பொழுது நீ என்னை நினைத்தாலும் பிரத்யட்சமாவேன். நீ என்னை அமாவாசை இரவிலே நினைத்து நான் உனக்குக் காட்சியளித்ததால் இந்த அமாவாசையே உனக்கும் எனக்கும் பிறந்தநாள். ஆகையால் நீயும் உன் குலத்தோரும் அமாவாசை தோறும் வேறு காரியங்கள் செய்யாமல் என்னைத் தியானித்தால் சீரும், சிறப்பும், வளமையும், செல்வமும், புகழும், பெருமையும் ஆயுளும், ஆரோக்கியமும் பெற்று நலமே வாழ்வீர்" எனக் கூறி மறைந்தாள் சௌடேஸ்வரி என மா.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகிறார் (Krishnamoorthy, 2007).

## காண்டரிஷி சாபம்

"தேவலப் பிரம்மம்' சிவபிரான் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிவந்து ஆடையும், பூணூலும் நெய்து தேவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தந்துவந்தார். ஒருமுறை காண்டரிஷிக்கு மட்டும் ஆடை கொடுக்கவில்லை, காண்டரிஷி, தேவலேரே எனக்கும் ஆடையும். பூணூலும் வேண்டும் எனக்கேட்டார். ஆனால் தேவலரோ உமக்கு நாளைக்குத் தருகின்றேன், இன்று இல்லையெனக் கூறினார். காண்டரிஷி கடுங்கோபம் கொண்டு எனக்கு இல்லையென்றதால் நீர் மானுடனாய்ப் பிறப்பாய் எனச்சாபம் இட்டார். இச்சாபத்தால் தேவலர் மானுட உருவில் ஏழு அவதாரங்கள் எடுத்து ஆமோத நகரை அரசாட்சி செய்தார்! காண்டரிஷியின் சாபத்தால் தேவபிரமம், தேவலர், வித்யாதரர், புஷ்பதந்தன் , வேதாள மகரிஷி, வரரிஷி ,தேவசாலி தேவதாசமய்யன், என்னும் ஏழு அவதாரங்களை எடுத்தார். தேவலர், தேவதாசமய்யன் என்னும் பெயரில் இறுதி அவதாரம் எடுத்து ஆமோத நகரை அரசாட்சி புரிந்து வந்தார். இவர் வழிவந்த 'கோராமர்' மகன் 'உருத்திரன்'. உருத்திரனுக்குப் பின் அவர் மகன் 'காலசேனன்' ஆமோத நகர் அரசாட்சியை ஏற்று கலிங்கநாட்டு மன்னன் மகள் துர்களையை மணம் புரிந்தான். காலசேனன் வம்ச விருத்தி இன்றி பத்தாயிரம் பெண்களை மணந்தான். பத்தாயிரம் பெண்களை மணந்தும் வம்சவிருத்தி இன்றி மிகவும் வருந்தினான். வருந்திய காலசேனன் கௌதம மகரிஷியைக் கொண்டு புத்ரகாமேஷ்டி யாகத்தைச் செய்தான். யாகத்தின் பயனால் பத்தாயிரம் குழந்தைகள் பிறந்தன. தக்க பருவம் வந்தவுடன் இப்பத்தாயிரம் குழந்தைகளுக்கும் எழுநூறு மகரிஷிகளைக் கொண்டு உபதேசம் முதலிய தீட்சைகளைச் செய்தான். எந்தெந்தக் குழந்தைகளுக்கு எந்தெந்த மகரிஷி தீட்சை செய்தாரோ அந்தந்த குழந்தைகளும் அவர்களின் வம்சத்தினரும் அந்தந்தக் மகரிஷியின் கோத்திரங்கள் ஆயினர். மகரிஷியின் வழி இச்சமூகத்தில் எழுநூறு கோத்திரங்களும் பத்தாயிரம் குலங்களும் தோன்றின. இப்பத்தாயிரம் குழந்தைகளின் வழிவந்தவர்களே 'தேவாங்கர்' என அழைக்கப்பட்டனர்." என்று இவ்வினத்தின் மக்கள் பெருக்கம் குறித்து தேவாங்கச் சிந்தாமணி நூல் எடுத்துரைக்கிறது (Krishnamoorthy, 2007).

இன்றைய நடப்பியல் வாழ்விலும், இக்குல மக்கள் தங்களை அடையாளப்படுத்தும் போது, ஏதேனும் ஒரு மகரிஷியின் கோத்திரங்கள் பெயரிலேயே அடையாளப்படுத்துகின்றனர்.

## தொன்மக்கதையும் சமூக உருவாக்கமும்

சமூக உருவாக்கத்தின் அமைப்பு குறித்து மானிடவியல் அறிஞர்கள் மூன்று நிலைகளை முன்னிறுத்துகின்றனர். 1. தாய்வழிச்சமுதாயம் 2. தந்தைவழிச்சமுதாயம் 3. தாய்,தந்தை இருவரும் சமம் என்பவையாகும். சமயவழிபாடு, சமயக்கதைகள் கொண்டு ஆராயும் போது மேற்கூறிய கருத்துகளின் அடிப்படையிலேயே சமூக உருவாக்கம் அமையப்பெற்றதை உணரமுடிகிறது. தேவாங்கர் குலத்தொன்மக்கதை வழி, அவர்களின் சமூக அமைப்பினை நோக்கும்போது தாய்த்தந்தை இருவரும் சமம் எனும் கருத்தின் வழி இருப்பதைக் காணமுடிகிறது. சிவனின் அங்கத்திலிருந்து குலமுதல்வரான தேவலர் தோன்றுகிறார். அவரின் வழிவந்த பத்தாயிரம் குழந்தைகளின் மக்களே தேவாங்கர் என அழைக்கப்படுகின்றனர் என்பதில், சமூக உருவாக்கத்தில், தந்தைக்குரிய நிலையையும், தந்தையைத் தலைமையாகக் கொண்ட இனம் மற்றும் குடும்ப அமைப்பின் தோற்றத்தையும் காணமுடிகிறது.

"வஞ்ஜிரமுஷ்டி, தூம்ரவக்கிரன், தூம்ராட்சன், சித்திரசேனன், பஞ்சசயனன்" என்ற அசுரர்களுடன் அம்மன் போர் நிகழ்த்தி தன்மகனைக் காக்கின்றார் என்ற கருத்தும், மேலும், இக்குல மக்களின்

தொன்மக்கதையை பக்தவச்சலபாரதி அவர்கள் கூறும் போது, “அபிமானி உதித்துமானி என்ற இருபெண்கள் பருத்திச்செடிகளாக மாற்றப்பட்டனர். இச்செடிகளின் பருத்தியிலிருந்து தேவல முனிவர் ஆடை நெய்து மண்ணுலகில் பலருக்கும் கொடுத்தார்.” என்ற கருத்தும், முதலில் கூறப்பட்ட அசுரர்கள் எனும் எதிரிகளை அழித்த போது வெளிவந்தகுருதியிலிருந்து நூல்களைத் தோய்த்து வெண்மை, கருமை, செம்மை, மஞ்சள், பசுமை என ஐவகை வண்ணங்களாக மாற்றுகிறார் என்ற கருத்தும், உற்பத்தி உருவாக்கத்தின் பெருக்கத்தையும் அதிலுள்ள பொருள் கூறுகளையும் பெண் சமுதாயம் அறிந்திருந்தனர் என்பதையே காட்டுகின்றன (Bhakthavatsala Bharathi, 2008). இதன் அடிப்படையில் குலமுதல்வனான தன்மகனைக் காத்தல், நெசவுத்தொழிலின் நுட்பங்களை அறிந்து சமூகத்தின் பொருளாதாரத்தை நிறைசெய்தல் எனும் நிலையில் சமூக உருவாக்கத்தில் தாயிக்குள்ள உரிமையைக் காணமுடிகிறது. ஓரினத்தின் வளமை மற்றும் செழுமையில் தாயின் உழைப்பும், பொறுப்பும் அதிக அளவில் இருப்பதாலும், சமயக்கோட்பாட்டு அடிப்படையிலும் தாயை முன்னிறுத்திய தாய்த்தெய்வ வழிபாட்டு மரபு இக்குலத்தில் தோன்றியதைக் காணமுடிகிறது. மேலும் தாய்,தந்தை இருவரின் சமநிலையைக் காட்டும் பொருட்டு “இராமலிங்கசௌடேஸ்வரி அம்மன்“ எனும் பெயரில் தங்கள் குலதெய்வத்தைக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. சிவனின் அர்த்தநாதீஸ்வரர் வடிவும், மதுரை மீனாட்சிசுந்தரேஸ்வரர் எனும் பெயரும் சமத்துவநிலைக்குச் சான்றாக அமைவது இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். நாகரீக வளர்ச்சி, பிற்காலத்தியப் பெண்ணாதிக்கச் சிந்தனை, ஆணாதிக்கத்தின் மேல்நிலைத் தன்மை என்று கூறினாலும், சமுதாயத்தில் நடப்பியல் வாழ்வில் ஆணின்றி பெண்ணும், பெண்ணின்றி ஆணும் தனித்து வாழ்வியல் நடத்துதல் இயலாது, இருவரும் இணைந்த அமைப்பே சமுதாயம் என்பதை மேற்கூறியக் கதையும், அதன்வழிபெறப்பட்டக் கருத்தும் நமக்கு உணர்த்துகின்றன.

## தாய்த்தெய்வ வழிபாட்டில் தொன்மம்

வேளாண் சமுதாயத்தில், பெண் வேளாண்மையை வளப்படுத்தியதைப் போன்று மக்களைப் பெற்று பேணிக்காத்து சமுதாயத்தை வளப்படுத்தியமையால் வளமைக்கும் செழிப்புக்கும் உரியவளாக, முதன்மையானவளாகப் பெண் போற்றப்பட்டாள். இதன் அடிப்படையிலேயே தாய்த்தெய்வ வழிபாடு உலகெங்கும் தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளன. தங்கள் குலம் செழுமையும் வளமையும் பெறும் என்ற மரபுநிலைப்பட்ட சமுதாய நம்பிக்கையே இவ்வழிபாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகிறது. சமுதாய நம்பிக்கையின் அடிப்படையிலும் குலச்சான்றோர்களின் வாக்கின் படியும் சௌடேஸ்வரி அம்மனை தாய்த்தெய்வமாக வணங்கும் தேவாங்கர் குலமக்களின் வழிபாடு குறித்த தொன்மக்கதை.

"தேவல முனிவரது ஏழாவது சந்ததியான தேவதாசமையன் அம்மனுக்கு ஆலயம் கட்டி அத்துடன் சுவாமியும் எழுந்தருள வேண்டினான். எம்பெருமான் ஊருக்குப் புறத்தேயுள்ள ஆவாரஞ் செடியுள்ள பகுதியைத் தூய்மை செய்து அங்கு அம்மனை எழுந்தருளச் செய்து ஆலயத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். அம்மன் ஆலயத்தை அடைந்தவுடன் நானும் வந்து அம்மனுடன் சேர்ந்து கொள்வேன் என்று வரம் தந்தார். அதன்படி ஊருக்கு வெளியேயுள்ள ஆவாரஞ் செடியுள்ள பகுதியைத் தேர்ந்தெடுத்து தூய்மை செய்து 'பாகு' என்னும் கத்தியை வைத்துப் பூசைகள் செய்து அம்மனை அங்கு எழுந்தருளச் செய்தனர். அங்கு தோன்றிய அம்மன் என்னை ஒரே நாளில் ஆலயத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றாள். முன்னே அரசனும் குடிமக்களும் செல்ல வேண்டும் பின்னால் நான் வருவேன். நான் வரும் அடையாளமாக என் கால் சிலம்பொலி கேட்கும். யாவரும் ஆலயம் செல்லும் வரை திரும்பிப் பார்க்கக் கூடாது. அப்படி திரும்பி பார்த்தால் நான் அங்கேயே நின்று விடுவேன். ஆலயத்திற்குள், வரமாட்டேன் என்று கூறினாள். அனைவரும் அதற்கு இசைந்து அம்மனைப்போற்றி துதித்து மங்கள வாத்தியங்கள் முழங்க அம்மன் சிலம்பொலி கேட்க ஆலயத்திற்குச் சென்று கொண்டு இருந்தார்கள். அப்பொழுது வழியில் ஆறு குறுக்கிட்டது. ஆற்றில் பாதம் பதியும்அளவு தண்ணீர் ஓடியது. ஆற்றைக் கடந்த போது அம்மன் சிலம்பொலி கேட்கவில்லை. முன்னே சென்ற மக்கள் அம்மன் வரவில்லை போலும் எனக் கருதி திரும்பிப் பாக்க அம்மன் அந்த இடத்திலேயே நின்று விட்டாள். மக்கள் மன்றாடி வேண்டியும் வரவில்லை. அதனால் வீரர்கள் கத்திகளை எடுத்து மார்பிலும் முதுகிலும் தொடையிலும் வெட்டிக் கொள்ளத் துவங்கினர். அவர்கள் உடலில் இருந்து இரத்தம்

வடிந்தது. சில வீரர்கள் தண்டகங்களை(பாடல்) பாடத் துவங்கினர். அதன் பின்பு அம்மன் மனமிரங்கி அவர்களுடன் ஆலயத்திற்குள் சென்றாள். அம்மன் அருளால் வீரர்களுக்கு கத்திபட்ட பகுதியில் எந்தவொரு காயங்களுமின்றி நலமுடன் இருந்தார்கள்.” (சிவத்திருசோமசுந்தரப் பெருமாள், தகவலாளி) என்று வழிபாட்டிற்குரிய தொன்மக்கதையை இக்குலமக்கள் எடுத்துரைப்பதாக சிவத்திருசோமசுந்தரப் பெருமாள், கூறுகிறார்.

## அலகு நிறுத்துதல் வழிபாடு

இவர்களின் வழிபாட்டில் பெரு நிகழ்வாக அறுபது ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்த்தப்பெறும் ‘அலகு சேவித்தல்’ எனும் சக்திவழிபாட்டு நிகழ்வாகும். முன்பு அறுபது ஆண்டு என்கின்ற கணக்கிட்டு முறை மாற்றம் பெற்றுள்ளது. ஊருக்கு வளமை வேண்டும் எனும் நோக்குடன் ஊர் பெரியோர்கள் ஒன்று கூடி இவ்வழிபாட்டிற்குரிய நாட்களைத் தேர்வு செய்கின்றனர். இவ்வழிபாட்டின் முக்கிய நிகழ்வு ‘அலகு’ என அழைக்கப்படும் கத்தியை பானையின் முனையில் எந்தவொரு பொருளின் ஆதாரமின்றி நிற்க வைப்பதாகும். இந்நிகழ்வு நடைபெறும் முன்பு பலவிதச் சடங்குகளை செய்கின்றனர். அலகு நிறுத்தும் நாளன்று அம்மன் திருக்கோவிலில் சன்னிதானத்திற்கு முன்புள்ள விசாலமான பகுதியில் அனைவரும் பார்க்கும்படியான இடத்தில் அலகுநிறுத்தல் நிகழ்ச்சியை நடத்துகிறார்கள். அம்மன் முன்பு ஐந்து முகக்குத்துவிளக்கு ஏற்றி வைக்கிறார்கள். கீழே நெல்பரப்பி, அலகு நிறுத்தவதற்கென குயவர் செய்து கொடுத்தப் பானையில் மஞ்சள், பால், கோமியம், சந்தனம், திருநீறு, குங்குமம் கலந்த நீரை நிரப்பி அபிசேக ஆராதனைகள் செய்கிறார்கள். அலகு நிறுத்தவதற்குத் தேர்ந்தெடுத்த வீரர்களில் ஒருவர் தன் வாயை மஞ்சள் துணியால் கட்டிக்கொண்டு, குதிரை மீது கொண்டு வந்த அலகில் கட்டியுள்ள பட்டுக் கயிற்றைப் பிடித்து பானையின் விளிம்பில் அலகு நிறுத்த முயற்சி செய்வார். அலகுநிறுத்துவதற்குரிய பாடலைப்படும் பக்தர்களின் பிரார்த்தனையால், அலகு நிறுத்த முயல்பவர் அம்மன் அருள்பெற, அவர் கத்தியை விட்டுவிட, அரைகிலோ எடையுள்ள அலகு பானையின் விளிம்பில் தலைகீழாக நிற்கிறது. "அலகு தலைகீழாக நிற்கும் வரை அக்குல பெண்களையும், வேற்று மதத்தினர் எவரையும் கோவிலைச் சுற்றி நிற்பதற்கு அனுமதிப்பதில்லை. .அவ்வாறு பெண்கள் நின்றால் அம்மன் கத்தி வடிவில் நிலை கொள்ளமாட்டார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பானையில் அலகை நிலைநிறுத்தும் வரை அனுமதிக்காமல், ஆண்கள் முன்னின்று அதனை நிலைநிறுத்தி சடங்குகளை நிறைவு செய்த பின்னர் பெண்களை வழிபடுவற்கு அனுமதிக்கின்றனர். இவ்வாறு நிலைநிறுத்தப்பெறும் அலகு எவ்வித ஆதாரமின்றி 24மணி நேரத்திற்கு (எந்த நேரத்தில் நிறுத்துகிறார்களே அந்தபொழுதிலிருந்து 24 மணி நேரம் கணக்கிடப்பெறுகிறது.) பானையின் விளிம்பில் நிற்கிறது. பெண்கள் தீட்டுடையவர்களாகக் கருதப்படுவதால் அவர்களை கோவிலைச்சுற்றி நிற்பதற்கு அனுமதிப்பதில்லை”. என்கிறார்.

## வழிபாட்டு மரபும் தந்தை வழி சமூகமும்

வழிபாட்டு மரபிற்கான இத்தொன்மக்கதையில் அரசு நிறுவன சூழலையும் சமயச்சடங்குகளில் ஆணாதிக்க நிலையையும் காட்டுகிறது. இதனை நாம் இரு நிலைகளில் காணமுடிகிறது. “முன்னே அரசனும் குடிமக்களும் செல்ல வேண்டும், பின்னால் நான் வருவேன். நான் வரும் அடையாளமாக என் கால் சிலம்பொலி கேட்கும். யாவரும் ஆலயம் செல்லும் வரை திரும்பிப் பார்க்கக் கூடாது. அப்படி திரும்பி பார்த்தால் நான் அங்கேயே நின்று விடுவேன். ஆலயத்திற்குள், வரமாட்டேன் என்று அம்மன் கூறுகிறார். ஆற்றைக் கடந்த போது அம்மன் சிலம்பொலி கேட்கவில்லை. முன்னே சென்ற மக்கள் அம்மன் வரவில்லை போலும் எனக் கருதி திரும்பிப் பார்க்க அம்மன் அந்த இடத்திலேயே நின்று விட்டாள் எனும்“, இப்பகுதி அரசு தலைமை ஆணித்தரமாகக் கால் கொண்டப்பின்னர், வேளாண்மை உற்பத்திக்குரிய பெண் தலைமைச் சமுதாயம், நாகரிகம் தோன்றிய இடமாகக் கருதப்படும் ஆற்றங்கரையில் முற்றிலும் அழிக்கப்பட்டதைக் காட்டுகிறது.

மக்கள் மன்றாடி வேண்டியும் வரவில்லை. அதனால் வீரர்கள் கத்திகளை எடுத்து மார்பிலும் முதுகிலும் தொடையிலும் வெட்டிக் கொள்ளத் துவங்கினர். அவர்கள் உடலில் இருந்து இரத்தம்

வடிந்தது. சில வீரர்கள் தண்டகங்களை(பாடல்) பாடத் துவங்கினர். அதன் பின்பு அம்மன் மனமிரங்கி அவர்களுடன் ஆலயத்திற்குள் சென்றாள். எனும் கதையாடலில் பெண்ணின் தலைமையைப் புறந்தள்ளிவிட்டு அவளின் இடத்தை நாம் கவர்ந்து கொண்டதால் ஏதேனும் தீங்கு நேர்ந்துவிடுமோ என்ற மனிதனின் உளம் சார்ந்த அச்சவுணர்வு வெளிப்படுகிறது. இவ்வச்சணர்வின் மேலிடே அவர்கள் தங்கள் உடலை கத்தியால் புண்படுத்திக் கொள்ளும் நிலையென்ற கருத்திற்கு இடமளிக்கிறது. மேலும் பெண்சமுதாயம் கற்றறிந்த வளமை உருவாக்கத்தின் மூலக்கருத்துக்களை அவளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஆண்சமுதாயம் மேற்கொண்ட சமதான முயற்சியாக இருக்கும் என்ற கருத்திற்கும் இடமளிக்கிறது.

"அலகு தலைகீழாக நிற்கும் வரை அக்குலப் பெண்களையும், வேற்று மதத்தினர் எவரையும் கோவிலைச் சுற்றி நிற்பதற்கு அனுமதிப்பதில்லை. அவ்வாறு பெண்கள் நின்றால் அம்மன் கத்தி வடிவில் நிலை கொள்ளமாட்டார்.' எனும் இப்பகுதியில் பெண்ணின் உடற்கூற்றியலில் இயற்கையாக நிகழும் தீட்டு எனும் நிகழ்வை அவளை அடிமைப்படுத்துவதற்குரிய ஆயுதமாகக் கையில் எடுத்துள்ளதைக் காணமுடிகிறது. மனித இனப்பெருக்கத்திற்கு மூலதாராமாக இருக்கும், கருப்பையின் குருதிப்போக்கு இங்கு தீட்டாகக் கருதப்படுவது, ஆணாதிக்கச் சமுதாயத்தின் அறியாமையையே வெளிப்படுத்துகிறது. இருப்பினும் கால வெள்ளத்தில் ஆணிண் ஆதிக்கமே சமுதாயத்தில் கால்க்கொண்டதை இக்கதைப் புலப்படுத்துகிறது.

## முடிவுரை

தேவாங்கர் குலமக்களின் தொன்மக்கதை வழி, அவர்களின் சமூக அமைப்பினை நோக்கும் போது தாய், தந்தை இருவரும் சமம் எனும் கருத்தின் வழி இருப்பதைக் காணமுடிகிறது. சமூக உருவாக்கத்தில், தந்தைக்குரிய நிலையையும், தந்தையைத் தலைமையாகக் கொண்ட இனம் மற்றும் குடும்ப அமைப்பின் தோற்றத்தையும் காணமுடிகிறது. மரபின் அடிப்படையில் தாய்த் தெய்வ வழிபாட்டை மேற்கொண்டாலும், பெண்ணின் உடற்கூற்று நிகழ்வைக் கொண்டு ஆணாதிக்கச் சமுதாயம் சமயச் சடங்குகளில் தங்களை வலுபடுத்திக் கொண்டதை கதைகள் வெளிப்படுத்துகின்றன. பெண்களை முன்னிலைபடுத்தாமைக்குரிய காரணம் ஆய்விற்குரியதாக அமைகிறது. இக்கதையின் வடமொழி மூலத்தை ஆராய்வதன் வழி இதற்கான விடை கண்டறியப்பட வாய்ப்புள்ளது. அல்லது அறிவியல் ஆய்விற்கோ. பகுத்தறிவின் பகுப்பிற்கோ இடமில்லை தன்மைக் கொண்டது என்ற அறிஞர்களின் கூற்றுப்படி மக்களின் உளவியல் சார்ந்த தன்மை எனக் கொண்டு சமூகம் காத்தளித்த கட்டமைப்பை அப்படியே ஏற்றுக் கொள்ளும் பண்பை இக்கதைகள் வெளிப்படுத்துகின்றன.

## References

Bhakthavatsala Bharathi, (2008), Tamilar Maanidaviyal, Adaiyalam Pathippagam, Trichy, India.

Kathir Mahadevan, (1989) Thonmam, Kathiragam, Chennai, India.

Krishnamoorthy, M., (2007) Devanga Chintamani, Gayathiri veeliyeedu, Udamalpet, Chennai, India.

Vaanamaamalai, V., (1980) Pazhankathaigalum Pazhamozhigalum, New century book house, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License